# விடை தேடும் வினாக்கள்



## நீறுபூத்த நெருப்பு மலர்கள்

www.saivamonline.com

முனைவர். இரா. செல்வக்கணபதி

# Contact Details




www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online

sspathipagam@gmail.com

G Pay +91 94440 21113

+91 94440 21113

UPI 9444021113@UPI

# 2. நீறுபூத்த நெருப்பு மலர்கள்

தமிழ் மக்களுக்குத் தாய்மொழிப் பற்று மிகுதி. இந்த வளமான மொழிக்குச் சொந்தக்காரர்கள் என்பதில் அவர்களுக்கு ஒருவித செருக்கும் உண்டு. உலகின் பிற மொழிகளுக்கு இல்லாத சிறப்பு, அப்படி என்ன உங்கள் தமிழில் இருக்கிறது என்று கேட்டுப்பாருங்கள். சட்டென்று விடை தருவார்கள். தமிழில் என்ன இல்லை? எல்லாம் இருக்கிறது. இங்கே தொல்காப்பியம் உண்டு; வள்ளுவரின் குறள் இருக்கிறது; சிலம்பு போல் ஒரு நூல் உலகில் உண்டா; கம்பன் கற்பனைகள் ஈடு இணையற்றவை; பெருமிதப் பட்டுப் பேசுவார்கள். இப்படி, மொழிப்பெருமை பேசும் நம்மவர்களில் பலருக்கு ஒரு குறள் கூடச்சொல்ல வராது. தொல்காப்பியம் பற்றி எதுவுமே தெரியாது. அவை உயர்ந்தவை என்று பெருமிதப் படத்தெரிந்த நம்மவர்களுக்கு, அவற்றை உணர வேண்டும் என்று விருப்பமே இருப்பதில்லை. உணர்ச்சி பூர்வமான இந்தத் தமிழ் அன்பு போராட்டங்களுக்கு உதவக்கூடுமே அன்றி, மொழி வளர்ச்சிக்கு எவ்வித ஆக்கமும் சேர்க்கப்போவதில்லை.

அவர்கள் கிடக்கின்றார்கள் சராசரி மனிதர்கள். படிப்பாளிகளைச் சோதித்துப் பாருங்கள், அங்கேயும் அதேகதைதான். ''இடுக்கண் வருங்கால் நகுக'' என்று வள்ளுவர்

www.saivamonline.com

கூறியுள்ளார் என்பார்கள். பலே, வள்ளுவத்தில் பயிற்சி இருக்கிறதே என்று ஏமாந்துவிடாதீர்கள். குறளின் எஞ்சிய பகுதியைக் கேட்டுப்பாருங்கள் சிரித்து மழுப்புவார்கள்.

ஏழு சீர் குறளில், மூன்று சீர்ப் படித்தவர்களுக்கு, மீதி நான்கு சீர்க் கற்க நேரம் கிடைப்பதில்லை, ''அதனை அடுத்தூர்வது அஃது ஒப்பது இல்'' என்ற குறளின் பிற்பகுதி பலருக்குத் தெரியாது. ''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' என்பார்கள். அடுத்தவரி தெரியாதது மட்டுமல்ல; யார் கூறியது என்றோ, எந்த நூலில் இருக்கிறது என்றோ பலருக்குத் தெரிந்திருக்காது. மேலும் வேடிக்கை; ஏதேனும் ஒரு மேடைப்பேச்சாளர் பெயர் கூறி அவர் சிந்தனை என்று செம்மாப்புடன் கூறுவார்கள். இது திருமூலரின் திருமந்திரச் சிந்தனை என்பது தமிழ்ப்படித்த பலருக்குமே கூட அறியப்பட்டதல்ல.

---

**உலகின் பிற மொழிகளுக்கு இல்லாத சிறப்பு, அப்படி என்ன உங்கள் தமிழில் இருக்கிறது என்று கேட்டுப்பாருங்கள். சட்டென்று விடை தருவார்கள். தமிழில் என்ன இல்லை? எல்லாம் இருக்கிறது. இங்கே, தொல்காப்பியம் உண்டு; வள்ளுவரின் குறள் இருக்கிறது; சிலம்பு போல் ஒரு நூல் உலகில் உண்டா? கம்பன் கற்பனைகள் ஈடு இணையற்றவை. பெருமிதப்பட்டுப் பேசுவார்கள். இப்படி, மொழிப் பெருமை பேசும் நம்மவர்களில் பலருக்கு ஒரு குறள் கூடச் சொல்ல வராது.**

---

ஒரு சோதனைக்கு வேண்டுமானால் முயன்று பாருங்கள். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'', ''அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்'', ''தென்னாடுடைய சிவனே போற்றி'' இப்படி எத்தனையோ தெரிந்த தொடர்கள்; தெரியாத பின்புலங்கள். இப்படி நீறுபூத்துக்கிடக்கும் நெருப்பு மலர்கள் ஒன்றல்ல; இரண்டல்ல; ஓராயிரம் உண்டு. அவற்றில் சிலவற்றை இங்கே அடையாளம் காணலாம்.



www.saivamonline.com

தமிழ் மாணவர்கள், தமிழ்க் கற்றவர்கள், கற்பிக்கும் மாண்புடைய ஆசிரியர்கள், தமிழறிஞர்கள் இவர்களில் பலரும் மரபு வழிச் சிந்தனைக்குள்ளே கட்டுப்பட்டுக்கிடக்கின்றனர். புதிதாகச் சிந்திப்பதை, வேறுபட நோக்குவதைப் பாவம் என்றும், தமிழ்த்துரோகம் என்றும் கூறுகின்றவர்களுக்கும் இங்கே குறைவில்லை.

பண்டை உரைகாரர்கள் சிந்தித்து வெளியிட்டதற்கு மேலாக, என்ன புதிதாகச் சிந்திக்க இருக்கிறது என்று, கேலி பேசுபவர்களையும் பார்க்கின்றோம். அகலச்சால் ஓட்டுபவர்களே அன்றி, ஆழஉழுவார் கண்களில் நிழலாடவில்லை. கடந்த ஐம்பதாண்டுகளில் முதல் முயற்சி மேற்கொண்டு ஆழச்சிந்தித்து இலக்கியத் தடத்தில் புதுமை கண்டு காட்டியோர் மிகச் சிலர். நுனிப்புல் மேயும் போக்கு இன்று எங்கும் நிலவக் காணலாம்.

---

**"ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்பார்கள். அடுத்தவரி தெரியாதது மட்டுமல்ல; யார் கூறியது என்றோ, எந்த நூலில் இருக்கிறது என்றோ பலருக்குத் தெரிந்திருக்காது. மேலும் வேடிக்கை, ஏதேனும் ஒரு மேடைப் பேச்சாளர் பெயர் கூறி அவர் சிந்தனை என்று செம்மாப்புடன் கூறுவார்கள். இது திருமூலரின் திருமந்திரச் சிந்தனை என்பது தமிழ்ப்படித்த பலருக்குமே கூட அறியப்பட்டதல்ல.**

---

உரைநடைப் புத்திலக்கிய வருகைக்குப் பின், பழந்தமிழ் இலக்கியங்களில் நாட்டமும் இல்லை; நாடுவார் சிலரும் நன்கு முயலவும் இல்லை; அணிகொள் காவியம் ஆயிரம் கற்றவர்கள் பலரும் ஆழ்ந்து கிடக்கும் கவியுள்ளம் கண்டார்கள் இல்லை.

காப்பிய நுட்பமும் கவிதை அழகும் காண, அகராதிகள் மட்டும் போதும் என்று கருதிய காலம் மலையேறிவிட்டது. இன்று உலகியலும், உளவியலும், சமூகவியலும் அறிந்தவர்களால்தான் புதுமை கண்டு காட்டவியலும். ஏன்? எதற்கு? எப்படி? எதனால்?



www.saivamonline.com

என்ற வினாக்களே பாவம் என்று கருதினால் கவியுள்ளம் காண்பது எப்படிச் சாத்தியமாகும்?

சமய இலக்கியத்தடத்தில் அச்சமும், மரபு வழி ஆசாரமும் புதிய சிந்தனைகளுக்கு முட்டுக்கட்டைகளாக நிற்கின்றன. மரபுவழி இலக்கியங்களின் பெருமிதம், உலகியல் உண்மைகளோடு உரசிப்பார்த்தே நிறுவப்பெறுதல் வேண்டும். எந்த ஒரு கோணத்தில் வினாவப்படும், எந்த ஒரு வினாவையும் சந்திக்கும் துணிச்சல், இலக்கிய ஆய்வாளனுக்கு இன்று உடனடித் தேவையாகிறது. எந்த இலக்கியவாதியையும், எவரும், ஊன்றுகோல் கொடுத்துத் தூக்கி நிறுத்தத் தேவையே இல்லை. பண்டைய படைப்பாளிகள் தெய்வங்களல்லர்; மனிதர்களே. குறைகண்டால் சுட்டிக்காட்டலாம்.

---

**தமிழ் மாணவர்கள், தமிழ் கற்றவர்கள், கற்பிக்கும் மாண்புடைய ஆசிரியர்கள், தமிழறிஞர்கள் இவர்களில் பலரும் மரபு வழிச் சிந்தனைக்குள்ளே கட்டுப்பட்டுக் கிடக்கின்றனர். புதிதாகச் சிந்திப்பதை, வேறுபட நோக்குவதைப் பாவம் என்றும், தமிழ்த்துரோகம் என்றும் கூறுகின்றவர்களுக்கும் இங்கே குறைவில்லை.**

---

குசேலருக்கு இருபத்தேழு குழந்தைகள். அவர் வறுமையால் வாடினார். துணைவியும் குழந்தைகளும் பசியால் சாம்பினர். மனைவி கண்ணனைக் கண்டு நிலைமை கூறி உதவி பெற்று வருமாறு தூண்டினாள். குசேலர் அவைக்குச் சென்று கண்ணனைக் கண்டார். வறுமை கூறினார். கண்ணன் அருளால் குசேலர் வறுமை அகன்றது. இது நாம் அறிந்த கதை. கண்ணன் அருள் வறுமை அகற்றும், வாழ்வு தரும் என்பது கதை கூறும்உண்மைகள். சமயம் சார்ந்த பார்வையில் கதை சரிதான். ஆனால், ஒரு குறும்புக்கார மாணவன் உலகியல் அறிவோடு ஒரு கேள்வி கேட்கின்றான். குசேலருக்கு இருபத்தேழு குழந்தைகள் என்றால், மூத்த குழந்தைக்குக் குறைந்தது இருபத்தைந்து வயதாவது இருக்குமே என்கிறான். பதினாறு வயதிற்குமேல், உழைக்கும் வயதில் பத்துப்



www.saivamonline.com

பேர் இருந்திருப்பார்களே, அந்தப் பத்துப் பேர் உழைத்திருந்தால் குசேலர் வாழ்வில் வறுமை இருந்திருக்காதே. மாணவன் மேல் கோபப்படுவதிலே என்ன நியாயம் இருக்கிறது? அவன் சமூகப்பார்வை நியாயமானதுதான். சமயம் சார்ந்த கதை என்கிறீர்களா? இருக்கட்டுமே, சமயம் சார்ந்த கதைகளைக்கூட, சமூக ஒழுங்கிற்கு உட்பட்டதாக ஏன் இயற்றக் கூடாது. புதிய சிந்தனைத் தடங்களுக்கு வாய்ப்பூட்டுப்போடும் போக்கு நெடுங்காலம் இனி நிலைக்காது.

நாலடியார் தோற்றம் பற்றி நெடுநாட்களாக ஒரு கதை வரலாறு போல் சொல்லப்பட்டு வருகிறது. காஞ்சியில் வாழ்ந்த சமண முனிவர்களை அரசன் போற்றி வந்தான். நாடு பஞ்சத்தில் பட்டது. வறுமை சூழ்ந்தது. மன்னன் நிலை உணர்ந்து, புலவர்கள்

---

**அகலச்சால் ஓட்டுபவர்களே அன்றி, ஆழ உழுவார் கண்க்ளில் நிழலாடவில்லை. கடந்த ஐம்பதாண்டுகளில் முதல் முயற்சி மேற்கொண்டு, ஆழச் சிந்தித்து, இலக்கியத் தடத்தில் புதுமை கண்டு காட்டியோர் மிகச்சிலர்.**

---

ஒரு நாள் இரவு, அவனுக்குச் சுமையாக இருக்க விரும்பாது, ஒவ்வொரு பாடல் எழுதி வைத்து விட்டு நாடு கடந்து போய்விட்டனர். மன்னன் அறிந்து புலவர்களை வெகுண்டான். அவர்கள் எழுதிவைத்துச் சென்ற பாடல்களை ஏறெடுத்தும் பாராது, பாலாற்றில் கொட்டக் கட்டளையிட்டான். ஏவலர் கொட்டினர். பாலாற்று வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போயின பல; சில எதிர் நீச்சல் இட்டு கரையேறின. அவற்றை எடுத்துத் தொகுத்தான் மன்னன். அதுவே நாலடி நானூறு. கதை நீளமாக நடைபோடுகிறது.

ஏடு பாலாற்று நீரில் எதிர் நீச்சலிட்டு அற்புதம் விளைத்தது என நூலுக்குச் சிறப்பைச் சேர்க்கக் கதை எழுதிய நம்மவர்கள், ஒன்றை மறந்துவிட்டனர். பஞ்சகாலத்தில் பாலாற்றில் நீர் எங்கிருந்து வந்தது? நீர் கரைபுரண்டு ஓடியிருந்தால் பஞ்சம் வந்திருக்குமா? இந்தச் சிறு முரண்பாடு கூட கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாது, பல நாலடியார் பதிப்புகளில் இதே



www.saivamonline.com

கதை, இப்படியே எழுதப் பெற்றுள்ளதே! எதையும் ஆராயாது அப்படியே ஏற்கும் மனோபாவம் இலக்கிய உலகிற்கு ஏற்றம் தருவதாக அமையாது.

இத்தகைய புறவரலாற்றுப் போக்குகளை விட்டு விட்டு, நீறுபூத்த நெருப்பாக, வெளிப்பட்டுத் தோன்றாது, சாம்பல் மண்டிக்கிடக்கும் அழகிய கவிமலர்தாம் எத்தனை? எத்தனை? நமது முயற்சியின்மை; சோம்பல்; மரபுவழிச் சிந்தனைக் கட்டுகளை உடைக்க மறுக்கும் மனநிலை; ஏன், எதனால் என்று கேட்பதே பாவம் என்று கருதும் தயக்கம்; இவைகளைத் தூக்கி எறிந்து விட்டு ஒரு பயணம் தொடங்கினால், நீறுபூத்த நெருப்பு மலர்களின் உண்மை அழகைக் கட்டாயம் காணலாம்.

''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்''. நாம் தொடக்கக் கல்வியில் கற்ற, மறவாத ஒரு பழம் பாடல் இது. பாட்டு என்ன சொல்கிறது? தாயும் தந்தையுமே தெய்வம் என்கிறது.

---

**காப்பிய நுட்பமும், கவிதை அழகும் காண, அகராதிகள் மட்டும் போதும் என்று கருதிய காலம் மலையேறி விட்டது. இன்று உலகியலும், உளவியலும், அரசியலும், சமூகவியலும் அறிந்தவர்களால்தான் புதுமை கண்டு காட்டவியலும்.**

---

அம்மா, அப்பா இருவரும் தெய்வங்கள். அவர்களை வணங்கி வாழுங்கள் என்பதற்கு மேலாக ஆராய இவ்வரியில் என்ன செய்தி இருக்கிறது? இருக்கிறது; கட்டாயம் இருக்கிறது. அன்னையும் பிதாவும் தெய்வம். யாருக்கு? நமக்குத்தான். சரி,நமக்கு, அன்னையும் பிதாவும் தெய்வம் என்றால், நம் பெற்றோர்களுக்கு யார் தெய்வம்? இது தெரியாதா? அவர்கள் தாயும் தந்தையும். அவர்களுக்கு? அவர்களின் தாயும் தந்தையும்.இப்படியே வினாவை அடுக்கிக் கொண்டே போனால், எங்கேயாவது ஓர் இடத்தில் வினா நின்று விடும். ஆம், உலகில்



www.saivamonline.com

எல்லாருக்கும் முற்பட்ட ஒரு தாயும் தந்தையும் உளர். அவர்களே நாம் போற்றி வணங்கும் அம்மையும் அப்பனும்.

பாட்டில் இன்னொரு நுட்பமும் உண்டு. ''அன்னையும் பிதாவும் தெய்வம்'' என்று பாட்டு முடியவில்லை. ''முன்னறி தெய்வம்'' என்று உள்ளது. முன்னறி தெய்வம் என்றால், முன்னே அறிந்து, வழிபட்டுப் போற்ற வேண்டிய தெய்வம் என்பது பொருள். எனவே, இவர்கள் தெய்வம் அல்லர். அறிவு வளர்ச்சி பெறாத இந்த வயதில், இவர்களைத் தெய்வம் என்று அறிந்தால் போதும். வளர வளரப் பின்னே அறிந்து போற்ற வேண்டிய தெய்வம் தாமே புலப்படும் என்று ஒற்றைவரிக் கவிதை ஊதிப்பார்க்கையில் பளபளக்கின்றது. எனவே, கவிதை எது வாயினும் ஆழமாகச் சிந்தித்து உண்மை அழகைக்காணும் துடிப்பு நமக்கு வேண்டும். இத்தகு பார்வையால் ஆக்கம் இல்லாமல் போனாலும் போகலாம்; ஆனால், குறைவந்து, குற்றம் ஏதும் சூழப்போவதில்லை.

---

**சமய இலக்கியத் தடத்தில் அச்சமும், மரபு வழி ஆசாரமும் புதிய சிந்தனைகளுக்கு முட்டுக்கட்டைகளாக நிற்கின்றன. மரபுவழி இலக்கியங்களின் பெருமிதம், உலகியல் உண்மைகளோடு உரசிப்பார்த்தே நிறுவப்பெறுதல் வேண்டும். எந்த ஒரு கோணத்தில் வினாவப்படும், எந்த ஒரு வினாவையும் சந்திக்கும் துணிச்சல், இலக்கிய ஆய்வாளனுக்கு இன்று உடனடித் தேவையாகிறது.**

---

மகள் ஆத்திசூடி ப் படிக்கின்றாள். அதில் ஒரு வரி ''ஙப்போல் வளை''. அவள் கேட்கிறாள்; ஙப்போல் வளை என்றால் என்னபொருள்? நமக்கு மட்டுப்படவில்லை. ஏதோ ஏதோ கூறிச் சமாளிக்க முயல்கிறோம். தெரியவில்லை என்று கூறிவிடுவது உத்தமம். நம்மில் பலருக்குத் தெரியாது என்று ஒத்துக் கொள்வதிலே ஓர் அவமான உணர்ச்சி. ''ங'' என்னும் எழுத்து வடிவத்தைப் பார்த்தாயா? நிமிர், எதிர்ப்பு வந்தால் சாய்ந்து விடு;





www.saivamonline.com

மேலும் எதிர்ப்பா? கீழ் நோக்கி வா? மறுபடியும் தலை எடுத்து வளைந்து பார், பின் கிட, நிமிர்ந்து நில், எவ்வளவு சாமார்த்தியமான விளக்கம். எழுத்தின் வரிவடிவின் மேல் நாம் அமைத்துக் கொண்ட கற்பனை விளக்கம் இது. யாராவது ஏற்பார்களா? மாட்டார்கள். இலக்கிய நுட்பம் காண, உண்மையை அறிந்து மகிழ, உலகியல் அறிவோடு, மொழியின் இலக்கண இலக்கிய வரம்புகளும் அறிய வேண்டும். ஙப்போல் வளை என்றால் என்ன பொருள்? தமிழ்ச் சொல்லியலும், எழுத்திலக்கண வரலாறும் அறிந்தவர்களுக்கு ஒன்று தெரியும்.

---

**ஒரு குறும்புக்கார மாணவன் உலகியல் அறிவோடு ஒரு கேள்வி கேட்கின்றான். குசேலருக்கு இருபத்தேழு குழந்தைகள் என்றால், மூத்த குழந்தைக்குக் குறைந்தது இருபத்தைந்து வயதாவது இருக்குமே, என்கிறான். பதினாறு வயதிற்குமேல் உழைக்கும் வயதில் பத்துப் பேர் இருந்திருப்பார்களே, அந்தப் பத்துப்பேர் உழைத்திருந்தால், குசேலர் வாழ்வில் வறுமை இருந்திருக்காதே! மாணவன் மேல் கோபப்படுவதில் என்ன நியாயம் இருக்கிறது. அவன். சமூகப்பார்வை நியாயமானதுதான்.**

---

''க'' வை அடுத்த ''ங'' வரிசையில் உயிர்மெய் எழுத்துக்கள் பன்னிரண்டு. ங, ஙா, ஙி, ஙீ, என அவை தொடரும். இப்பன்னிரண்டு உயிர் மெய்களில் ங வைத் தவிர எஞ்சிய பதினொரு எழுத்துக்களும் இன்று தமிழ் மொழியில் வழக்கில் இல்லை. காலப் பழமையில் கரைந்து போயின. இப்பதினொரு எழுத்துக்களும் இடம் பெறும் சொல் ஒன்று கூடத் தமிழில்இல்லை. இவை எந்தவொரு சொல்லின் முதலிலோ, இடையிலோ, ஈற்றிலோ வருவதில்லை. ஆனாலும் இவை இன்றும் நெடுங்கணக்கில், அரிச்சுவடி அட்டையில் இருநூற்றுப்பதினாறு உயிர்மெய்ப் பட்டியலில் வாழ்ந்து கொண்டுதான் உள்ளன.



www.saivamonline.com

ஙப்போல் வளையென்று அவ்வையார் கூறவருவது இதுதான். அங்ஙனம், இங்ஙனம் போன்ற சொற்களில் பயன்படும் ஒரே உயிர்மெய் எழுத்து ங மட்டுமே. ஙா முதலிய எழுத்துக்கள் பதினொன்றும் பயன்பாடுடையன அன்று. தான் மட்டும் பயன்படும் ங கரம், பயன்படாத தன் இன எழுத்துக்கள் பதினொன்றையும் சாகாது வளைத்துப் பாதுகாத்து வைத்திருக்கிறது. அதுபோல், மனிதர்களும் தாம் மட்டும் பயன்பாடுடையவர்களாக வாழும் நிலையில், வலிமையும், பயன்பாடும் அற்ற தம் கிளையினரைச் ச ாகாது, தளராது வளைத்துப் பாதுகாத்தல் வேண்டும் என்பதை ஆத்திசூடி அடையாளம் காட்டுகின்றது. கவிதை நுட்பம் காண்பது ஒரு அரிய கலை. அதனைக் கற்றுத் தேர்ந்தாரே நீறுபூத்த நெருப்பு மலர்களை விள்க்கிக் காட்டும் வல்லமை மிக்கார்.

---

**சமயம் சார்ந்த கதைகளைக்கூட, சமூக ஒழுங்கிற்கு உட்பட்டதாக ஏன் இயற்றக் கூடாது. புதிய சிந்தனைத் தடங்களுக்கு வாய்ப்பூட்டுப் போடும் போக்கு நெடுங்காலம் இனி நிலைக்காது.**

---

உலகியல் அறிவும், மொழியறிவும் இருந்தால் மட்டும் போதுமா? போதாது, சிறிச சமூக வரலாற்று அறிவும் இலக்கிய ஆராய்ச்சிக்குத் தேவை. இந்தத் தேவையை உணர்த்தும் ஒருவரிப்பாட்டு ஒன்றுதான் ''மைவிழி மங்கையர் மனையகல்'' என்பது. ஆத்திசூடியில் இடம்பெற்ற இப்பாடலுக்கு, விலை மாதர் இல்லத்தை விட்டு நீங்கு என்பதே பொருள். பாடல் விலைமாதரைத்தான் குறிக்கிறது; வினா எழுகிறது. மைவிழி மங்கையர் என்பதற்கு மை தீட்டப் பெற்ற கண்களை உடைய விலை மாதர் என்பதா? ஆம் என்றால், ஒரு சிக்கல் வந்துவிடும். இலக்கியங்களில் பெரும் கற்பரசியரும், குல மகளிரும் மை அணிந்ததாகச் செய்திகள் வருகின்றனவே, என்றால், அவர்கள் விலை மகளிர் என்பதை எந்தச் சொல் குறிக்கிறது? ''மனை'' என்ற சொல் அப்பொருள் குறிக்கிறது என்கிறது அறிஞர் உலகம். மனை என்பது இல்லம். பெண்களுக்குச் சொத்துரிமை இல்லாத காலத்துப் பாடல் இது. வீடு முதலிய உரிமைப் பொருள்கள், ஆடவர்



www.saivamonline.com

பெயரிலேயே இருந்து வந்துள்ளன. ''மைவிழி மங்கையர் மனை'' என்றால், இவள் பிறரை மயக்கிப் பெற்ற செல்வத்தால் வந்த மனை என்று பொருள் தரும். இவ்வாறான நுட்பங்களைச் சமூக வரலாற்றுக் கண்ணோட்டத்தில் மட்டுமே காண இயலும்.

இத்தகு சிறுசிறு கவிதைகளை விட்டு விட்டுச் சங்க இலக்கியம் முதலாகக் கால வரிசையில் ஒரு சில நீறுபூத்த நெருப்பு மலர்களை ஊதிப்பார்க்கலாம்.

மதுரைப்புலவர் ஒருவர்; அறியப்பட்டவர், ஆனால், அவரை நேரில் கண்டதில்லை. ஒரு நாள் வேறோர் ஊர் சென்று சேர்கிறார். அவர் வந்த வண்டியின் பின் கதவைத் திறந்து வரவேற்ற உள்ளூர்க்காரர்கள் அவர் தோற்றம் கண்டு வியக்கின்றனர்.

---

**நமது முயற்சியின்மை; சோம்பல்; மரபுவழிச் சிந்தனைக் கட்டுகளை உடைக்க மறுக்கும் மனநிலை; ஏன் எதனால் என்று கேட்பதே பாவம் என்று கருதும் தயக்கம்; இவைகளைத் தூக்கி எறிந்து விட்டு ஒரு பயணம் தொடங்கினால், நீறுபூத்த நெருப்பு மலர்களின் உண்மை அழகைக் கட்டாயம் காணலாம்.**

---

கன்னங்கரேரென்ற கறுத்தமுடி, குழிவிழாக்கண்கள், வாடாத உடல், இளமை மாறாத மிடுக்கு; இவர் எழுபதைத் தொட்டவரா்யிற்றே, எப்படிவந்தது இந்த இளமை? வியந்தவர்கள், வினாவும் தொடுத்தனர். ஐயா, ஆண்டுகள் பலகடந்தும் தங்கள்முடி நரைக்காது இருப்பதற்குக் காரணம் என்ன? புன்முறுவல் பூத்த மதுரைச்சான்றோர் பிசிராந்தையார், நான்கு காரணங்களை அடுக்குகின்றார். என் இளமைக்கு முதற்காரணம், மனைவி எனக்கு நற்குண நல்இயல்புகளோடு கூடிய மாண்பினள். அவள்வழிப் பிறந்த பிள்ளைகளும் மாட்சிமை மிக்கவர்கள்; அறிவு நிரம்பியவர்களாக உள்ளனர்.

இரண்டாவது, என் கீழ்ப்பணிபுரியும் குற்றேவல் இளைஞர்கள் அனைவரும் நான் நினைப்பதே நினைந்து, விழைவதே இயற்றும் மாண்பினர்.



www.saivamonline.com

மூன்றாவது, நாடாளும் வேந்தன் அல்லவை செய்யாது செங்கோல் இயற்றும் இயல்பினன்.

நான்காவது, அறிவன அறிந்து, பொறிவழிப் புலனடக்கி, கொள்கை நெறி மாறாது வாழும் சான்றோர் பலர் என் ஊரில் வாழ்கின்றனர்.

முடிநரைக்காத இளமைக்குப் பிசிராந்தையார் உரைத்த காரணங்கள் இவை. நான்கு காரணங்கள் ஆயினும், ஏதேனும் ஒன்று மட்டுமே தலையாய, உண்மையான காரணமாதல் கூடும். எஞ்சியன துணைக் காரணங்களாகவே இருக்க வேண்டும்.

பாடலைச் சிந்தித்து அசைபோடுகிறோம். ஆய்வை, வசதிக்காக நாலாவது காரணம் தொடங்கித் தலை கீழாக அலசத்

---

**தான் மட்டும் பயன்படும் ஙகரம், பயன்படாத தன் இன எழுத்துக்கள் பதினொன்றையும் சாகாது வளைத்துப் பாதுகாத்து வைத்திருக்கிறது. அதைப்போல், மனிதர்களும் தாம் மட்டும் பயன்பாடுடையவர்களாக வாழும் நிலையில், வலிமையும், பயன்பாடும் அற்ற தம் கிளையினரைச் சாகாது, தளராது வளைத்துப் பாதுகாத்தல் வேண்டும் என்பதை ஆத்திச்சூடி அடையாளம் காட்டுகின்றது.**

---

தொடங்குகிறோம். ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் என்னைச் சுற்றி மதுரையில் வாழ்வதால் எனக்குக் கவலை இல்லை; அதனால் நரையில்லை என்பது உண்மையானால், மதுரையில் வாழும் எல்லோருக்குமே முடி நரைத்திருக்கக் கூடாது. சான்றோர் அருகிருப்பு எல்லோருக்குமே உரியது. ஆனால், வியப்பு பிசிராந்தையார் மேல் மட்டுமே அமைகிறது. நரையின்மைக்கு இரண்டாவது காரணம் மன்னனின் செங்கோன்மை ஆட்சி என்கிறது கவிதை. இதுவும் அப்படித்தான்; பாண்டியனின் செங்கோல் ஆட்சிப் பிசிராந்தையாருக்கு மட்டும் அமையவில்லை.



www.saivamonline.com

நாடு முழுவதற்கும் அமைகிறது. பாண்டிய நாட்டில் முதியோர் அனைவரும் இளமைத் தோற்றத்தோடு இல்லை. வியப்பு பிசிராந்தையார்பால் மட்டுமே விரிகிறது.

எனவே ''வேந்தனும் அல்லவை செய்யான்காக்கும்'' என்ற காரணமும், ஒரு துணைக்காரணமாகவே ஒடுங்குகிறது. அடியிலிருந்து மூன்றாவது காரணம், குறிப்பறிந்து ஏவல் செய்யும் ஏவலர் கிடைத்திருப்பதால் எனக்குக் கவலையில்லை; எனவே, எனக்கு நரையில்லை என்பது. இதையும் முற்றாக ஏற்க இயலவில்லை. தக்க பணியாளர் அமையாவிடின் தகுதி உடையாரைத் தேடி அமைத்து மகிழலாம். எனவே, ''யான்கண்டனையர் என்இளையரும்'' என்பதும் நரையின்மைக்கு உரிய காரணமாக அமையவில்லை.

---

**தனிமனிதன் தாழ்ச்சி உயர்ச்சிக்களுக்கு மனைவி மக்களின் குண இயல்புகளே உரிய காரணங்களாக அமைகின்றன. இவர்கள் மாற்றி அமைத்துக்கொள்ள இயலாத இயல்பினர். எனவே, ஒருவர் நரையின்மைக்கும், இளமைக்கும் கவலையின்மை காரணம்; கவலையின்மை நல்ல மனைவி, நல்ல குழந்தைகளினால் வருவது என்ற முதல் காரணம் உறுதியாகிறது.**

---

எஞ்சிய ஒரே காரணம் ''மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர்'' என்பது. இதுவே உண்மைக்காரணம். ''தாரமும், குருவும் தலைவிதி வசத்தால்'' என்பர். ''தற்காத்துத்தற்கொண்டாற் பேணி, தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' என்ற பண்பினளாக மனைவி அமையாவிடில் வாழ்க்கையில் மகிழ்ச்சி இல்லை. ''உள்ளது என் இல்லவள் மாணாக்கடை''? என்று வினாத் தொடுப்பார் வள்ளுவர். தனிமனிதன் தாழ்ச்சி உயர்ச்சிகளுக்கு மனைவி மக்களின் குண இயல்புகளே உரிய காரணங்களாக அமைகின்றன. இவர்கள் மாற்றி அமைத்துக்கொள்ள இயலாத இயல்பினர். எனவே, ஒருவர் நரையின்மைக்கும் இளமைக்கும் கவலையின்மை காரணம்;



www.saivamonline.com

கவலையின்மை நல்ல மனைவி, நல்ல குழந்தைகளினால் வருவது என்ற முதல் காரணம் உறுதியாகிறது. இதுவே உண்மைக் காரணம் எனில், ஏன் பிறவற்றை உரைக்க வேண்டும்? சரியான வினா? தலைநரைத்த முதியவர் பலர் ஒன்று கூடித் தங்களுக்கு ஏன் முடி நரைக்க வில்லை என்று கேட்டவுடன், எனக்கு நல்ல மனைவி அமைந்திருக்கிறாள்; அதனால் கவலையில்லை; அதனால் நரைக்கவில்லை என்று பிசிராந்தையார் கூறினால், வினாத்தொடுத்தவர்களுக்கு நாணம் மேலிடும். எனவே, காரணமும் விளக்க வேண்டும்; அதனைப்பிறர் மனம் நோகாது பண்பாட்டுடன் எடுத்துரைக்கவும் வேண்டும் என்ற பிசிராந்தையார் பண்பாட்டுள்ளம் நன்கு புலனாகிறது. ஆய்வின் நிறைவில் சிந்தனையில் ஒளி பிறக்கிறது. இவ்வாறு காண்பது ஒருவகைச் சிந்தனை தோட்டமே, மேலும் புதிய கோணம் காணலாம். கண்டால் இத்தகு நெருப்பு மலர்களின் ஒளியும் பயன்பாடும் தெற்றெனத் துலங்கும்.

---

**நாளை, கோசலத்து ஆட்சி, தயரதனுக்குப் பின் உரிய இராமனுக்கும் சேராது, கன்றைமறித்துக் கட்டிப்பால் கறக்கும் தன்மைபோல், கைகேயி வரம் பெற்ற பரதனுக்கும் சென்று சேராது, தொடர்பற்ற இராமபிரானின் பாதுகைகளுக்குக் கிடைக்கப்போகின்றன என்று முன்னெச்சரிக்கை செய்கிறான். விரிந்த கற்பனை, ஓர் அழகிய உள்ளீட்டுக்குத்தான் என்று அறியும்போது மகிழ்ச்சி இரட்டிப்பாகின்றது.**

---

இனி வள்ளுவத்தைக் காணலாம். ஈரடியால் மூவுலகையும் ஆண்ட ஏந்தல் திருவள்ளுவர். வள்ளுவர் குறள் அறிவு வளர வளரப் புதுப்புது சிந்தனைகளை வழங்கும் நுட்பம் மிக்கது. ஐந்தாம் வகுப்பு முதல், முதுகலை வரை பாடமாக அமைவது திருக்குறள் மட்டுமே என்றால், ஒரே குறளைப் பத்து வயதில் ஒருவாறும், பதினைந்தாம் ஆண்டில் ஒரு வகையிலும், இருபது வயதில் வேறொரு கோணத்திலும் சிந்திக்க வேண்டும் என்பதுதானே



www.saivamonline.com

நோக்கமெனத் தெரிகிறது. குறள், தமிழர்களின் பெருமிதத்திற்குப் பயன்பட்ட அளவு, ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. வள்ளுவத்திற்குப் பலர் உரைகண்டும், காணாத நுட்பங்கள் பல நூறு உள்ளன. ஒன்றிரண்டைக் காணலாம்.

எது பெரிது என்று வள்ளுவரைக் கேட்கிறோம். பலவற்றைக் கூறுகின்றார். ஓரிடத்தில் ஒன்றை ''ஞாலத்தில் மாணப் பெரிது'' என்கிறார். ஒன்றை ''மலையினும் மாணப் பெரிது'' என்கிறார். ஒன்றைக் ''கடலில் பெரிது'' என்கிறார். கடலை விடப் பெரியது எது? வினவுகின்றோம். குறளொன்று தருகிறார். ''பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மைக் கடலின் பெரிது''. கைமாறு கருதாது ஒருவன் ஒரு நேரத்தில் செய்த உதவி கடலை விடப் பெரியது என்கிறார். குறளில் ஏதேனும் ஒன்றைச் சிறப்பிக்க,

---

**திருவாமூரில், நாளை பிறக்கப்போகும் கருப்பஞ்சாறு அனைய திருநாவுக்கரசர், மயக்கம் தரும் தேனை ஒத்த சமண சமயக் கருத்துக்களால் மயக்குண்டு, தொன்மைச் சமயமாகிய சைவத்தை விடுத்துச் சமணத்தில் சென்று சேரப் போகின்றார். இந்தக் கருப்பஞ்சாற்றுடன் பிறந்து, முன்னரே கெட்டிப்பட்ட திலகவதியார் என்ற வெல்லக்கட்டியைக் கொட்டி இக்கருப்பஞ்சாற்றை நாளை சைவ வயலில் பாய்ச்சப் போகிறார்கள்.**

---

பெரிய உவமை கூறுவது வள்ளுவரின் வழக்கம் என்று கூறிச் சிந்தனை முயற்சியிலிருந்து தப்ப முயலலாமா? கூடாது. ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கலாம்.

வீட்டு வாசலில் வந்து நிற்கும் ஏழை ஒருவன், ''அம்மா தாயே சோறு போடுங்கள்'' என்று கெஞ்சுகின்றான். வீட்டில், நம் அன்னை, சிறிது சோறு கொண்டு வந்து கழிவிரக்கப்பட்டு அந்த ஏழைக்கு இடுகின்றாள். சோறு இட்டவளுக்கு நோக்கம் ஏதும் உண்டா? இன்று இவன் சோறு கேட்கின்றான்; நாம் சோறு போடுகின்றோம். இதோ போல் ஒரு நாள் நாம் சோறு கேட்போம்;



www.saivamonline.com

அப்போது இவன் திரும்பப் போடுவான் எனக் கருதியா அன்னை சோறு இடுகின்றாள்? இல்லையே, அவள் எந்தக் கைமாறும் கருதாது அன்னமிடுகின்றாள். இதைத்தான் வள்ளுவரும் ''பயன் தூக்கார் செய்த உதவி'' என்கிறார். இவ்வுதவி, கடலை விடப் பெரிது என்கிறார் அவர். அன்னை இட்ட அன்னமும், பல வளம் நிறைந்த கடலும் ஒன்றாகுமா? இதன் மதிப்பென்ன? அதன் வளம் என்ன? ஒரு ரூபாய்ப் பெறாத தாயிட்ட சோறு, கடலுடன் எப்படி இணையாகும்? சமம் கூட இல்லை. கடலினும் அது பெரிதாமே! பொருந்தி வரவில்லையே! நின்று சிந்திக்கின்றோம், எங்கோ, ஏதோ, ஒரு நுட்பம் இருக்கத்தான் வேண்டும்.

நம் கருத்து, குறளில் ''நயன் தூக்கின்'' என்ற தொடரில் பதிகிறது. நயன் தூக்கின் என்றால், நன்மையை ஆராய்ந்தால் என்பது பொருள் எனத் தெரிகிறது. பயன் தூக்கார் செய்த உதவியின் மதிப்பு இங்கே ஒப்பிட்டு ஆராயப்படவில்லை. மாறாக அதன் பின்புலத்தில் நிற்கும் மனநிலை மட்டுமே ஆய்வுக்கு வருகிறது. நன்மையை ஆராய்தல் என்றால், நோக்கத்தை மதிப்பிடல் எனக் கொள்ளலாம். இங்கே, சோறிட்ட அன்னை நோக்கம்; அங்கே, நீர் கேட்ட மேகங்களுக்கு நீர் வழங்கிய கடலின் நோக்கம். கடலுக்கு நோக்கமா? ஒருவகைக் கருத்துக் கற்பனைதானே! ஆராய்வதில் தவறில்லை.

தாய் ஏழைக்கு எவ்வித எதிர்பார்ப்பும் இன்றிச் சோறிட்டாள். கடல் மேகத்திற்கு அவ்வாறு நீர் வழங்கிற்றா? இல்லை; அதனிடம், தாயின் உள்ளார்ந்த, கைமாறு கருதாத பண்பு நிலைகொண்டிருக்கவில்லை. அதற்கு ஓர் உள்நோக்கம் உண்டு. இந்த மேகங்களுக்கு இன்று நீர் வழங்குவோம். வழங்கினால், நீர் எங்கே போய்விடும்? மேகம் கறுத்து, நிலப்பகுதிக்குச் சென்று குளிர்ந்து இடி மின்னலுடன் மழையாகப் பொழிய, அது சிற்றருவியாய், பேரருவியாய் ஆற்றில் கலக்க, ஆறு மலைவள்த்தையும், நிலவளத்தையும் இணைத்துக் கொண்டு ஓடி, கடைசியில் நம்மிடம் வந்து இணையத்தானே போகிறது என்ற கரவு படைத்தது கடல். இப்போது, குறள் புரிகிறது. நயன் தூக்கினால், நன்மைக் கூறுபாடு, கடலைவிடப்பயன் தூக்கார்



www.saivamonline.com

செய்த உதவியில் பெரிது என்பது போதரும். இப்படித் தேடிக் காண்பதில் ஏற்படும் மகிழ்ச்சிக்கு ஈடு இணையேது?

காலத்தினால் செய்த நன்றி ஞாலத்தை விடப்பெரிது என்பதில் ஞாலமாகிய நிலம், காலம், பருவம் வகுத்துக் கொண்டு வழங்குமே தவிர உடையான் தேவையறிந்து உதவாது என்று பொருள்காணும் போது நுட்பம் புலனாகிறது.

இன்ப துன்பங்களில் ஆராவரிக்கும் மனிதனின் அடக்கம், இயற்கைக்கு மாறானது. ஆடாத மலை அடங்கிக் கிடப்பதைவிட, ஆரவாரிக்கும் மனிதன் உணர்ந்து அடங்குவதில் தாமே சிறப்பு அமைகிறது. எனவே, ''நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது'' என்பதின் நுட்பமும் விளங்குகிறது.

காமத்துப்பாலில் ஒரு காட்சியைப் பார்ப்போம். ''யான்நோக்கும் காலை நிலன் நோக்கும், நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும்'' என்பது நாம் அறிந்த குறள். என்ன பொருள்?

காதலன் பேசுகின்றான். என் காதலி, நான் அவளைப் பார்க்கும்போது, நாணத்தால் நிலத்தைப் பார்த்து நிற்கின்றாள். நான் அவளைப் பார்க்காத போது, அவள் என்னைப்பார்த்து மெல்லச் சிரிக்கின்றாள் என்கிறான். அவன் பார்க்காத போது, அவள் பார்த்துச் சிரித்தது, அவனுக்கு எப்படித் தெரிந்தது? ஓரக்கண்ணால் களவுப் பார்வைப் பார்த்தான் எனக் கூறலாமா? கூற இயலாதே? துணிந்து பார்க்க வாய்ப்பிருக்கும்போது சமாதானப்படுத்திக் கொள்ள அவசியமே இல்லை.

சொற்கள், காலம் மாறும் போது, தத்தம் பொருள் இழந்து பொருள் மாற்றம் பெறுவது இயற்கை. சங்க காலத்தில் களித்தல் என்ற சொல், கள்குடித்ததனால் வரும் கிளுகிளுப்பை உணர்த்திற்று; இன்று பொதுவான மகிழ்வைக் குறிக்கின்றது. இப்படி எத்தனை எத்தனையோ உள்ளன. குறளில் வரும் நோக்குதல் என்ற சொல்லிற்குச் சங்க காலத்தில் சிறப்புப் பொருள் ஒன்று இருந்தது. நோக்கு என்பது காதல் கலந்த பார்வை என்றே அக நூல்கள்



www.saivamonline.com

பொருள்தரும். ''நோக்கினாள், நோக்கி இறைஞ்சினாள்'' என்றும், ''இருநோக்கு இவள் உண்கண் உள்ளது'' என்றும் ''அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்'' என்றும் இச்சொல் காதலர் பார்வையையே குறித்து வருகின்றது. நிகராக, காண்டல், பார்த்தல் என்ற சொற்கள் பொதுப் பொருளைத் தந்து நின்றன.

குறளுக்கு வருவோம், ''யான் நோக்குங்காலை'' என்றால், தலைவன் தன் உள்ளத்தில் எழுந்த காதலைக் கண்களில் குழைத்துக் கொண்டு பார்த்தபோது என்பது பொருளாகிறது. நாணமிக்க இளையளாகிய தலைவி, தலைவனின் காமம் கலந்த பார்வையைச் சந்திக்க இயலாது தலைகுனிந்து நிலத்தைக் காதல் கூர்ந்து பார்ப்பாள் போல் பார்த்து நிற்கின்றாள். அவள் நாணம் உணர்ந்த தலைவன், காதலைக் கண்களிலிருந்து எடுத்து விட்டுப் பொதுப் பார்வை பார்க்கின்றான். இதைத்தான், ''நோக்காக்கால்'' என்கிறார் வள்ளுவர். அப்பார்வையைச் சந்திக்கத் துணிந்த தலைவி, தன் உள்ளத்தில் எழுந்த காதலைத் தன் கண்களில் குழைத்துக் கொண்டு, அவன் முதலில் பார்த்தது போல் ஒரு பார்வையை வீசுகின்றாள். ஆடவனாக இருந்தும் தலைவியின் காதல் கண் வீச்சில் கதிகலங்கி விடுகின்றான் தலைவன். அவன் தடுமாற்றம் உணர்ந்த தலைவி, சற்றே எள்ளி நகையாடுவது போல் அவனைப் பார்த்துச் சிறிதே நகைத்தாள். நீ, காதல் குழைத்த கண்களால் பார்த்தபோது, நான் இவ்வாறு தானே தடுமாறிப் போயிருப்பேன், தற்போது உனக்கு அது புரிகிறதா? என அவள் புன்னகைக்கின்றாள். ''நோக்கும் காலை'', ''நோக்காக்கால்'', ''மெல்லநகும்'' என்ற தொடர்கள் தரும் அரிய விருந்து இக்குறட்பா.

தொடர்ந்து, கம்பனில் ஒரு கவிதையைக் காணலாம். கற்பனைக்கும் எட்டாத கற்பனைகளிலும் நுண்பொருள் அமைப்பதில் கம்பனுக்கு ஈடுபாடு மிகுதி. இராமன் பிறந்த கோசல நாட்டின் மருதவளம் கூறவருகின்றான். உழத்தி மகளிரின் நடையழகுக்குத் தோற்ற அன்னங்கள் தம்தம் குஞ்சுகளை வயலில் பூத்திருக்கும் தாமரை மலர்களில் கண்வளர வைத்துவிட்டுக் காலை முதல் மாலை வரை நடைபழகுகின்றன. உழத்தி மகளின் நடையழகு, இன்னும் பெண் அன்னங்களுக்குப் பிடிபடவில்லை. மாலை வந்தும், அவை குஞ்சுகளை நினைத்து அவற்றிற்குப்



www.saivamonline.com

பாலூட்டவில்லை. இளம் அன்னக்குஞ்சுகள், மல்லாந்து படுத்துப் பசியால் வாய்விட்டு அரற்றி அழுதன. வயலில் மேய்ந்து வந்த, அண்மையில் கன்று ஈன்ற பெண் எருமைகள், தம்தம் கன்றுகளை நினைத்தன. அன்பில் அவை மடிசுரந்தன. பீரிட்டபால் தாமரைமலர்களில் மல்லாந்து படுத்தவாறு வாய்விட்டு அழுத அன்னக்குஞ்சுகளின் வாயில் சொரிந்தன. அவற்றைப் பருகி அவை பசிநீங்கிக் கண்மூடின. மெல்லிய தென்றல் வந்து தாமரை மலர்களை அசைத்துத் தொட்டிலாட்டின. வரப்பில் வாழ்ந்திருந்த பச்சைத் தவளைகள் ஒலி எழுப்ப, அவை தாலாட்டுப் பாட்டாய் விரிய அன்னக்குஞ்சுகள் கண்வளர்ந்தன. இத்தகு வளம் மிகுந்தது கோசலம் என்பது கம்பனின் அற்புதக் கற்பனை.

கற்பனையை ஆகா என்று இரசிப்பதோடு விட்டுவிடாது, உள்ளீடு எதுவும் உண்டோ என்று தேடத்தொடங்குகின்றோம். நீறு அகல நெருப்பு மலர்களின் அழகு தெரிகின்றது.

எருமையின் பால் யாருக்குச் சொந்தம்? ஐயமென்ன, அவற்றின் கன்றுகளுக்குத்தாம். அடுத்த உரிமை, அவற்றைக் காத்துவருகின்ற உடைமையாளருக்கு. கோசலத்து எருமைகளின் பால், அவற்றின் கன்றுகளுக்கும் போய்ச்சேராது, உரிய உடைமையாளனுக்கும் கிடைக்காது, தொடர்பற்ற அன்னக்குஞ்சுகளுக்குக் கிடைத்தன. இதன் மூலம் கவிஞன், ஏதோ வேறொன்றை முன்னதாகச் சொல்ல விழைகின்றான். என்ன அது? நாளை, கோசலத்து ஆட்சி, தயரதனுக்குப் பின், உரிய இராமனுக்கும் சேராது, கன்றைமறித்துக் கட்டிப்பால் கறக்கும் தன்மைபோல், கைகேயி வரம் பெற்ற பரதனுக்கும் சென்று சேராது, தொடர்பற்ற இராமபிரானின் பாதுகைகளுக்குக் கிடைக்கப்போகின்றன என்று முன்னெச்சரிக்கை செய்கிறான். விரிந்த கற்பனை, ஓர் அழகிய உள்ளீட்டுக்குத்தான் என்று அறியும்போது மகிழ்ச்சி இரட்டிப்பாகின்றது. பார்வை, நேரிது அன்று என்று எவரேனும் வாதிட்டால், இத்தகைய பார்வையால் காப்பியத்திற்குக் குறையேதும் வந்தடைவதில்லை என்று மறுப்புரைக்கலாம். அழகுத் தோட்டத்திற்குத் தடைவிதிக்க எவருக்கும் உரிமையில்லை என்பது முறையான விடையாக அமையும்.



www.saivamonline.com

கம்பனுக்கு ஈடாகத் தெய்வச் சேக்கிழார் செய்யும் கற்பனை ஒன்று அழகு நிறைந்த பின்புலம் கொண்டு விளங்குகிறது. கம்பன் அளவுக்குப் பெரும் கற்பனைக்களங்களைச் சேக்கிழார் அமைத்தவர் அல்லர். அது காப்பியக்கட்டுக் கோப்பால் தாமாகவே அமைகின்றது. திருநாவுக்கரசர் அவதரித்த திருவாமூர் வளம் கூறும் பகுதி அது. முதிர்ந்த கணுவெடித்த கரும்புகளை உழவர்கள் வெட்டுகின்றார்கள். வெட்டிய வாயிலிந்து பீறிட்ட கரும்பின் சாறு வயலில் பாய்கிறது. கரும்பின் இடையே கட்டியிருந்த தேனடைகள் கிழிந்து தேனும் கருப்பஞ்சாற்றுடன் கலந்து வயல் மடை உடைத்து வாய்க்காலில் பாய்கிறது. தேன் கலந்த கரும்பஞ்சாறோ, வளவயலில் பாயாது, மடை உடைத்துக் கொண்டுபோய் ஒரு தரிசுவயலில் பாய்கிறது. அதைக் கண்ட உழவன் துணுக்குறுகின்றான். மடையடைத்து மீண்டும் கருப்பஞ்சாற்றை வளவயலில் சேர்க்க நினைக்கின்றான்.

மடையடைக்க அங்கே மண்ணில்லை; வரப்பெல்லாம் மஞ்சளும், இஞ்சியும் கொஞ்சிக் குலவுகின்றன. வேறு வழி தெரியவில்லை. முதல்நாள் வெட்டி, சாறு பிழிந்து, ஆலையிலிட்டுக் காய்ச்சிக் கொட்டிய வெல்லக்கட்டிகள் களத்து மேட்டில் மலைபோல் கொட்டிக் கிடக்கின்றன. உழவன் ஒரு கூடையில் வெல்லக்கட்டிகளை ஏந்தி வந்து தரிசு வயலில் மடையில் கொட்டுகின்றான். மடையடைபட்டு கருப்பஞ்சாறு மீண்டும் உழவன் விரும்பிய வயலில் பாய்கிறது. அத்தகு வளம்மிக்கது திருநாவுக்கரசர் அவதரித்த திருவாமூர் என்று கற்பனையைச் சேக்கிழார் நிறைவு செய்கின்றார்.

கற்பனை சற்று மிகைபோல் தோன்றலாம். ஆனால், பின்புலச் செய்தியொன்று இங்கே இக்கற்பனையில் மறைந்து கிடக்கின்றது என்று அறியும் போது கற்பனையின் விரிவை நெஞ்சம் ஏற்கனவே செய்கின்றது. இதே திருவாமூரில், நாளை பிறக்கப்போகும் கருப்பஞ்சாறு அனைய திருநாவுக்கரசர், மயக்கம் தரும் தேனை ஒத்த சமண சமயக் கருத்துக்களால் மயக்குண்டு, தொன்மைச்சமயமாகிய சைவத்தை விடுத்துச் சமணத்தில் சென்று சேரப்போகின்றார். இந்தக் கருப்பஞ்சாற்றுடன் பிறந்து, முன்னரே கெட்டிப்பட்ட திலகவதியார் என்ற வெல்லக் கட்டியைக் கொட்டி



www.saivamonline.com

இக்கருப்பஞ்சாற்றை நாளை சைவ வயலில் பாய்ச்சப் போகிறார்கள். எவ்வளவு அழகான உள்ளீட்டுக் கற்பனை,

''கடைஞர்மிடை வயற்குறைந்த
 கரும்புகுறை பொழி கொழுங்சாறு
இடைதொடுத்த தேன்கிழிய
 இழிந்தொழுகு நீத்தமுடன்
புடைபரந்து ஞிமிறொலிப்பப்
 புதுப்புனல்போல் மடையுடைப்ப
உடைமடையக் கரும்படுகட்
 டியினடைப்ப ஊர்கள் தொறும்''

நூல்கள் தோறும், அழ்கிய, இத்தகைய நீறுபூத்த நெருப்பு மலர்களை நாம் முயன்று தேடிக் கண்டு கவிதை இன்பம் துய்ப்போம்.

www.saivamonline.com